




# ஹர ஹர சங்கரா

FREE COPY
September - 2025
Vol. 4 - ISSUE 11



# KODAMBAKKAM TIMES

# மஹாலய பக்ஷம் அதன் விளக்கம்



பக்ஷம் என்றால் 15 நாட்கள். மஹாளயம் என்பது பித்ரு தேவதைகள் வசிக்கும் இடம். பித்ருக்கள் பூமிக்கு வந்து நம்முடன் சூக்ஷ்ம ரூபத்தில் வசிக்கும் 15 நாட்களே மஹாளய பக்ஷம். புரட்டாசி மாச அமாவாசைக்கு முந்தைய 14 நாட்கள் மஹாளய பக்ஷம் என்று பெயர். புரட்டாசி அமாவாசையை மஹாளய அமாவாசை என்று சொல்கிறோம். இந்த நாட்களில் நமது மூதாதையர்களான பித்ருக்கள் பூலோகத்திற்கு சூக்ஷ்ம ரூபத்தில் வந்து நாம் அளிக்கும் பித்ரு தர்பணங்களை நேரடியாக ஏற்கிறார்கள். பொதுவாக பித்ருக்கள் எல்லா நாட்களிலும் பூலோகம் வர இயலாதாம். ஒவ்வொரு அமாவாசை, மாசப்பிறப்பு, அவர்கள் மறைந்த திதி நாட்கள் மற்றும் மஹாளய பக்ஷத்தில் மட்டுமே அவர்களால் பூலோகத்திற்கு வர இயலுமாம்.

அதனால்தான் அவர்கள் வரும் தினங்களில் பித்ரு பூஜையை செய்யச் சொல்லியிருக்கிறார்கள் மஹரிஷிகள். புரட்டாசி அமாவாசையன்று சகல லோகங்களிலும் இருக்கும் மஹரிஷிகள், தேவர்கள் மற்றும் எல்லா ஜீவன்களும் பூலோகத்திற்கு வந்து பித்ரு தர்பணம் செய்வதாகச் சொல்லப்படுகிறது. நமது பித்ருக்களான வசு, ருத்ர, ஆதித்யர்கள் கூட பூலோகம் வந்து பித்ரு தர்பணங்களை சூக்ஷ்ம ரூபமாய் செய்கிறார்கள் என்பர். அமாவாசை, மாசப்பிறப்பு மற்றும் க்ரஹண காலங்களில் செய்யும் தர்பணமானது நமது தந்தை மற்றும் முந்தைய 2 தலைமுறையினருக்கும், தாய் வழியில் 3 தலைமுறையினருக்குமாக 12 பேர்களுக்கு மட்டுமே செய்யப்படுகிறது. ஆனால் மஹாளய பக்ஷத்தில் மட்டுமே காருணீகர்கள் எனப்படும் சொந்தக்காரர்கள், குரு மற்றும் நண்பர்கள் ஆகிய எல்லோருக்கும்

செய்ய முடிகிறது.

மஹாளய பக்ஷம் ஆரம்ப தினத்தன்று பித்ரு தேவதைகள், சூரிய பகவான், தர்மராஜன் ஆகியோரின் அனுமதி பெற்று பித்ருக்கள், ஸ்வர்ண (தங்கம்) மயமான விமானங்களில் ஏறி நம்மிடம் வருகிறார்கள். இந்த விமானங்கள் சூரியனின் ஒளிக்கற்றைகள் மூலம் பறந்து வருகின்றன. இவ்விதம் பித்ருக்கள் பூமியில் இறங்கும்போது அவர்களை தேவர்களின் உலகிலுள்ள மகரிஷிகள் ஆசீர்வதிக்கின்றனர்.

பித்ருக்கள் பரம பவித்திரமானவர்கள். தங்களது ஜீவித காலத்தில் செய்துள்ள புண்ணிய செயல்களால் புடமிட்ட தங்கம்போல் ஒளிபொருந்தியவர்களாகப் பித்ருக்கள் பிரகாசிக்கிறார்கள் எனப் புராதன நூல்கள் போற்றிப் புகழ்கின்றன.

மீண்டும் தங்கள் குழந்தைகளைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியதால் அவர்கள் மகிழ்க்கி அடைவதாக "கருடபுராணம்" கூறுகிறது. அவர்கள் நம்மிடையே வந்து நம்முடன் தங்கும் இந்தப் பதினைந்து புனித நாட்களும் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும், எப்படி பேசவேண்டும், வீட்டை எப்படி வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை "வைத்யாநாத தீக்ஷிதம்" என்ற வடமொழி நூல் அதி அற்புதமாக நமது நன்மைக்காக விளக்கியுள்ளது.

இந்த பதினைந்து நாட்களிலும் ஒவ்வொருவரும் நமது வீட்டை மிகவும் சுத்தமாக வைத்துக் கொள்வது அவசியம். குடும்பத்தில் ஒருவருக்கொருவர் சண்டை போடுவது, தகாத சொற்களைப் பேசுவது ஆகியவற்றைக் கண்டிப்பாகத் தவிர்த்தல் வேண்டும்.

நாம் எந்த அளவிற்குத் தூய்மையாக இருக்கிறோமோ, எந்த அளவிற்குச் சுத்தமாக இருக்கிறோமோ, எந்த அளவிற்கு ஒற்றுமையாக இருக்கிறோமோ, எந்த அளவிற்குப் பித்ருக்களைச் சிரத்தையுடன் பூஜிக்கிறோமோ அந்த அளவிற்கு இந்தப் பதினைந்து நாட்களும் நம்முடன் தங்கியிருக்கும் நம் பித்ருக்கள் மனமகிழ்ச்சியையும், மனநிறைவையும் அடைகிறார்கள் எனப் பழைமையான தர்மநெறி நூல்கள் கூறுகின்றன.

**உடனுக்குடன் நன்மை**

நாம் செய்யும் அனைத்துப் புண்ணிய காரியங்களுக்கும் நமக்கு நல்ல பிரதிபலன் உண்டு. நமது நற்செயல்களுக்கான புண்ணிய பலனை எட்டு தேவர்கள் அவ்வப்போது சேர்த்து வைத்துக்கொண்டே வருகின்றனர். எதிர்காலத்தில் நமக்குத் துன்பங்கள் ஏற்படும்போது இவ்விதம் சேர்த்து வைத்த புண்ணிய பலன்களை நமது தேவைக்கு ஏற்றவாறு நமக்கு அளிக்கின்றனர். ஆனால் மஹாளய பக்ஷத்தின்போது நாம் பித்ருக்களை அந்தப் பதினைந்து தினங்களிலும் பூஜித்து, அவர்களுக்கு திருப்தியை அளிக்கும் நற்செயலின் பலன் மட்டும் நமக்கும், நம் குடும்பத்தினருக்கும், முக்கியமாக நமது குழந்தைகளுக்கும் உடனுக்குடன் அளிக்கப்படுகிறது. அதனால் குடும்பத்தில் ஏற்படும் சிரமங்களனைத்தும் உடனுக்குடன் தீர்க்கப்பட்டுவிடுகின்றன. மஹாளய பக்ஷத்தின் தனிச்சிறப்பு இதுதான்.

# நவராத்திரியில் ஏன் அம்பாளை குழந்தை ரூபத்தில் வழிபடுகிறோம்

........ பெரியவா விளக்கம்



நவராத்திரியில் பராசக்தியான துர்கா பரமேசுவரியையும், மகாலக்ஷ்மியையும், ஸரஸ்வதி தேவியையும் பூஜிக்கிறோம். மூன்று மூர்த்திகளாகச் சொன்னாலும், முப்பத்து முக்கோடி மூர்த்திகளாகச் சொன்னாலும் அத்தனையாகவும் இருப்பது ஒரே பராசக்திதான். இந்த உண்மையைத்தான் லலிதா ஸஹஸ்ரநாமம் பரதேவதையை வர்ணிக்கும்போது அவளே சிருஷ்டி செய்பவள் (ஸ்ருஷ்டிகர்த்ரீ - ப்ரஹ்ம ரூபா) என்று சொல்கிறது. லலிதையாக, துர்க்கையாக இருக்கிற பராசக்திதான் மஹாலக்ஷ்மியாகவும், ஸரஸ்வதியாகவும் இருக்கின்றாள்.

லக்ஷ்மி அஷ்டோத்திரத்தில் "பிரம்ம விஷ்ணு சிவாத்மிகாயை நம:" என்று வருகிறது. ஸரஸ்வதி அஷ்டோத்திரத்திலும் இப்படியே "பிரம்ம விஷ்ணு சிவாத்மிகாயை நம:" என்று வருகிறது. படைப்பு, அழிப்பு, காப்பு எல்லாம் செய்வது ஒரே சக்திதான் என்று இந்த


SREE MANGALAGURU JOTHIDA NILAYAM

'VAAZHVIL VELICHAM'

SURESH MADHAVAN

93609 45818

(With Appointment Whatsup Only)

நாமங்கள் நமக்கு நன்றாக உணர்த்துகின்றன. ஒரே பராசக்திதான் வெவ்வேறு வேஷங்களைப் போட்டுக்கொண்டு வெவ்வேறு காரியங்களைச் செய்கிறது. துர்க்கையாக இருக்கிறபோது வீரம், சக்தி எல்லாம் தருகிறாள், மஹாலஷ்மியாக சம்பத்துக்களைத் தருகிறாள், ஸரஸ்வதியாகி ஞானம் தருகிறாள்.

ஆதிபராசக்தியான துர்க்கையை பொதுவாகப் பார்வதியோடு ஐக்கியப்படுத்திச் சொல்லலாம். அவள் ஹிமவானின் புத்திரியானதால் மலைமகள். மஹாலக்ஷ்மி பாற்கடலில் தோன்றியதால் அலைமகள். ஸரஸ்வதி சகலகலா ஞானம் தருவதால் கலைமகள்.

பர்வதராஜ புத்திரியாக வந்த அம்பாளும், க்ஷீரசாகரத்திலிருந்து பிறந்த மஹாலக்ஷ்மியும், இரண்டு மஹரிஷிகளுக்குப் பெண்களாகவும் அவதரித்திருக்கிறார்கள்.

மஹாலக்ஷ்மியை மகளாகப் பெற்று சீராட்டி வளர்க்க வேண்டும் என்று பிருகு மஹரிஷி தபஸ் செய்தார். அதற்கிணங்கவே லக்ஷ்மிதேவி அவருக்குப் புத்திரியாக அவதரித்தாள். பிருகுவுக்குப் புத்திரியானதால் அவளுக்கு பார்கவி என்று பெயர் ஏற்பட்டது.

"பார்கவி லோக ஜனனி க்ஷீரஸாகர கன்யகா" என்று ஸம்ஸ்கிருத அகராதியான "அமர கோசம்" சொல்லும். இப்படியே காத்யாயன மகரிஷி சாக்ஷாத் பரமேசுவரியைப் பெண்ணாக அடைய வேண்டும் என்று விரும்பித் தபஸ் செய்தார். அம்பிகையும் அவருக்கு மகளாக ஆவிர்பவித்தாள். காத்யாயனருக்குப் பெண் என்பதாலேயே அவளுக்குக் காத்யாயனி என்ற பெயர் உண்டாயிற்று. துர்க்கைக்கு உரிய காயத்ரியிலே அவளைக் "காத்யாயனியாக தியானிக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறது.

லோக மாதாக்களாக இருக்கப்பட்ட தெய்வங்களைக் குழந்தையாக வரச் சொன்னதில் நிரம்ப விசேஷம் இருக்கிறது. "குழந்தையும், தெய்வமும் கொண்டாடும் இடத்திலே" என்கிறோம். தெய்வமே குழந்தையாக வந்தால், ரொம்பக் கொண்டாட்டமாகும். குழந்தைக்கு நம்மைப் போல் காமமும், குரோதமும், துக்கமும் வேரூன்றி இருப்பதில்லை. இந்த க்ஷணத்தில் ரொம்பவும் ஆசைப்பட்ட ஒரு வஸ்துவை அடுத்த க்ஷணத்தில் தூக்கிப் போட்டுவிட்டுப் போகிறது. கோபமும் இப்படியே சுவடு தெரியாமல் நிமிஷத்தில் மறந்து போகிறது. அழுகையும் இவ்வாறேதான். நாம்தான் உணர்ச்சிகளை ஆழ உள்ளுக்கு வாங்கிக் கொண்டு

You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

**COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar**

**K K NAGAR & VADAPALANI EDITION**

**COVERING AREA :**

**Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam**

**044 2484 4114 / 93826 82128 / 89390 70034**

E-mail : kodambakkamtimes@yahoo.com

மனத்தை கெடுத்துக் கொள்கிறோம். உணர்ச்சிகள் வேரூன்றாமல் குழந்தைகள் போல் நாமும் ஆனந்தமாக இருக்க வேண்டும். இதனால்தான் உபநிஷதமும் "குழந்தையாய் இரு" என்கிறது.

சாக்ஷாத் பராசக்தியைக் காத்யாயனியாகவும், மஹாலக்ஷ்மியை பார்கவியாகவும் குழந்தைகளாக்கி, அந்த பாவத்திலேயே வழிபட்டால் நமக்கும் குழந்தைத் தன்மை கிடைத்துவிடும். இந்த நாளில் வாட்டர்ஃப்ரூப் என்று சொல்வதுபோல் நாம் காம ப்ரூஃப், சோக ப்ரூஃப் எல்லாமாக சாந்தமாக ஆவோம். குழந்தை ரூபத்தில் இருந்தாலும் ஞானப் பாலூட்டும் ஸ்ரீமாதாவாக இருக்கிற தேவி நமக்கு இந்த அநுக்கிரகத்தைச் செய்வாள்.

குழந்தையாக வந்த காத்யாயனியை தமிழ் நாட்டுக் கிராம ஜனங்கள்கூட நீண்ட காலமாக வழிபட்டு வந்திருக்கிறார்கள் என்பது என் ஊகம். "காத்தாயி" என்று சொல்கிற கிராம தேவதை காத்யாயனிதான் என்று நினைக்கிறேன்.

"பட்டாரிகை" என்று பெரிய ஸ்ரீவித்யா உபாஸகர்கள் குறிப்பிடும் அம்பாளைத்தான் நம் கிராம மக்கள் "பிடாரி" என்று சொல்லிப் பூஜிக்கிறார்கள். பழைய செப்பேடுகளில் "பட்டாரிகா மான்யம்" என்பதைப் "பிடாரிமானியம்" என்று திரித்துக் குறிப்பிடுவதிலிருந்து இதை உணரலாம்.

இவ்வாறே கிராம ஜனங்களும் கூட ஸரஸ்வதியை நீண்ட காலமாக வழிபட்டிருக்கிறார்கள். "பேச்சாயி, பேச்சாயி" என்று சொல்கிற கிராம தேவதை பேச்சுக்கு ஆயியான வாக்தேவி ஸரஸ்வதியைத்தான் குறிப்பிடுகிறது. அம்பாளையும், மஹாலக்ஷ்மியையும், ஸரஸ்வதிதேவியையும் பூஜித்து எல்லாச் சக்தியும், சம்பத்தும், நல்ல புத்தியும் பெறுவோமாக.

---

# சீதாபிராட்டியின் சரணாகத ரக்ஷணம் ஏன் ராமனுடையதைக் காட்டிலும் உயர்ந்தது?

விபீஷணன் ராமனுடைய திருவடியைப் பிடித்துக் கொண்டபோது அவனை ரட்சித்து அருளினான் பரமாத்மா. சீதாபிராட்டியோ ஒரு படி மேலே போனாள்.

இந்திர புத்திரனான காகாசுரன் பிராட்டியினிடத்திலே அபசாரமாக நடந்து கொண்டான். அவனைத் தண்டிப்பதற்காக பகவான் பிரும்மாஸ்திரத்தைப் பிரயோகம் பண்ணினான். அசுரன் அஸ்திரத்துக்கு பயந்து ஓடுகிறான்.

இந்திரனாலும் கைவிடப்பட்டு, திருமூர்த்திகளாலும் கைவிடப்பட்டு, ஊர் ஊராகப் போய், வீடு வீடாக அலைகிறதுகாக்கை. ஆனாலும் ராம பாணத்தில் இருந்து அதனால் தப்பித்துக் கொள்ள முடியவில்லை. இந்தக் காகம் வீடு, வீடாகப் போய் சரணாகதி பண்ணியதற்கு ஒரு கதையை உபமானம் சொல்லுவார்கள். ஒரு யானையை வைத்துக் கொண்டு ஜீவிதம் நடத்திக் கொண்டிருந்தான் ஒரு பாகன். ஒரு நாள் அந்த யானைக்கு மதம் பிடித்தது. அடர்ந்த காட்டுக்குள் ஓடிப்போய்விட்டது. யானைப் பாகன் வந்து பார்த்தால் யானையைக் காணோம்.

எங்கெங்கோ தேடியும் அது கிடைக்கவில்லை. கடைசியில் ரொம்ப சிந்தித்தவனாக விழுந்து கிடந்தான் அவன். வீட்டுக்குப் போய் உருண்டு கிடந்த பானைகளை எல்லாம் எடுத்து ஒவ்வொரு பானையாக யானையைத் தேடினானாம். பெரிய, பெரிய இடங்களிலெல்லாம் தேடிக் கிடைக்காத யானை, பானைக்குள்ளே கைவிட்டால் கிடைத்துவிடுமா. அதைப் போலதான் காகாசுரனும் பலம் படைத்தவர்கள் எல்லாம் கைவிட்ட பின்னர் ஒவ்வொரு வீடாய்ப் போய் அபயம் கேட்டானாம்.

எந்த வீட்டிலும் அசுரனுக்கு உதவி கிட்டவில்லை. கடைசியில் ராமனிடத்திலேதான் வந்து சேர்ந்தான். சரணாகதி என்று அவன் திருவடியிலே வந்து இறக்கையைப் படியச் செய்தான். விழுந்தவனின் தலை ராமனின் பாதங்களை நோக்காமல் எதிர்திசை நோக்கித் திரும்பியிருந்தது. சீதாபிராட்டி



பார்த்தாள் குழந்தைக்கு சேவிக்கத் தெரியவில்லையே என்று காகாசுரனின் தலையை ராமனின் திருவடி நோக்கித் திருப்பி வைத்தாள். எத்தகைய கொலைக் குற்றம் புரிந்திருக்கிறான் அவன். அப்படிப்பட்டவனை என்ன வேண்டுமானாலும் பண்ணலாம் அல்லவா. ஆனால் பகவான் மகாலக்ஷ்மியினுடைய காருண்யத்தைப் பார்த்து கோபம் தணிந்து போனான். காகாசுரனுடைய ஒரு கண்ணை மட்டும் போக்குவதோடு நிறுத்திக் கொண்டான்.

அதனால் தான் இன்றைக்கும் காக்கைகளுக்கு ஒரு கண் பார்வை இல்லாமல் இருக்கிறது. தலையைத் திருப்பித், திருப்பி சாய்த்துத்தான் அதனால் பார்க்க முடியும். காகாசுரனின் தலையைத் திருப்பி வைத்து அவனுக்கு அனுக்ரஹம் பெற்றுத் தந்ததை காகாக்ஷி நியாயம் என்று சொல்வார்கள். பிழைத்துப் போன காக்கைக்கு ரொம்ப சந்தோஷம்.

அதே காருண்யம் தான் அத்தனை கொடிய ராக்ஷஸ ஸ்திரீகளையும் ஆஞ்சநேயனிடம் இருந்து காப்பாற்றியது. திரிசடை ஒருத்தி சரணாகதியினுள்ளேயே அத்தனைபேரையும் அடக்கி சரணாகத ரக்ஷணம் பண்ணி விட்டாளே தாயார். எனவே அந்த மஹாலக்ஷ்மியின் காருண்யமே உயர்ந்தது.

# மஹாபெரியவா அடிக்கடி விரும்பி கேட்கும் கதை

மஹாபெரியவா அடிக்கடி விரும்பி ரசித்து கேட்கும் கதை இது. இந்த கதையின் மூலம் நமக்கு பெரியவா உணர்த்துகின்ற பாடமும் அருமையானது.

பால் தன் கதையை சொல்வது போல் அமைந்துள்ளது. பாலுக்கு ஒரு பெரிய வருத்தம். பசுவின் வயிற்றில் இருந்தேன். என்னை ஒருத்தி கறந்து பாத்திரத்தில் ஊற்றினாள் அடுப்பை பற்ற வைத்து அந்த பாத்திரத்தை அடுப்பில் வைத்து சூடாக்கினாள் எனக்கு வலி தாங்கவில்லை துடித்து போனேன் பசுவின் வயிற்றில் அமைதியாக இருந்த எனக்கு ஏன் இந்த சோதனை? என்று என்னை நானே நொந்து கொண்டேன்.



பொங்கிய நிலையில் என்னை அடுப்பிலிருந்து இறக்கி வைத்தாள். நேரமாக, நேரமாக நான் ஆறியதும், புளித்த மோரைக் கொண்டு வந்து என்னோடு சேர்த்தாள். "இது என்னடா புது தண்டனை" என்று வருத்தப்பட்டேன். அதன்பிறகு யாரும் என்னை பற்றி கவலைப்படவில்லை. மறுநாள் திரவமாக இருந்த நான் திடமாக மாறி போனேன். எனக்கு "தயிர்" என்று புதிதாக ஒரு பெயரை வைத்தார்கள். அத்துடன் நிறுத்தினார்களா? என்னை ஒரு பானையில் ஊற்றி மத்து கொண்டு கடைய ஆரம்பித்தார்கள். நான் மறுபடியும் மோர் என்ற திரவம் ஆனேன்.

கடைந்து, கடைந்து கடைசியில் என்னுள்ளிருந்தே ஒரு திடப்பொருளை வரவழைத்து அதற்கு "பட்டர்" என்ற பெயரும் சூட்டினார்கள். "அப்பாடா" இனியாவது என் வாழ்க்கை "பெட்டர்" ஆகுமா என்று ஏங்கினேன்.

அத்துடன் தீர்ந்ததா என் கஷ்டம் இல்லை. அந்த வெண்ணையை, மறுபடி அடுப்பில் வைத்து உருக்கினார்கள். என் உயிரே போவது போல் அவ்வளவு வலி என்ன செய்வது பொறுத்துத்தான் தீரவேண்டும். எனக்கு இப்போது "நெய்" என்ற புதியபெயரை வைத்தார்கள். உருகிய நெய்யை ஒரு ஜாடியில் ஊற்றி அந்த வீட்டில் ஜன்னலுக்கு பக்கத்தில் வைத்தார்கள். அவ்வப்போது என்னை சிறிது எடுத்து புறங்கையில்வைத்து முகர்ந்து பார்த்தார்கள். நான் மிகவும் வாசனையாய் இருப்பதாக பேசிக்கொண்டார்கள்.

பாலாக இருந்த நான் பட்ட கஷ்டங்களையும் இப்போதுள்ள நிலைமையையும் நினைத்தபடியே இருந்த நேரத்தில் ஜன்னலுக்கு வெளியே இரண்டு பெண்கள் பேசிக் கொள்வதை ஒட்டுக்கேட்டேன். ஒருத்தி மற்றவளிடம் கேட்டாள்", உங்க ஊர்ல பால் என்ன விலை?" மற்றவள் அரை லிட்டர் ஆறு ரூபாய் என்றாள் (இது அந்த காலத்து பால் விலை) உடனே முதல் பெண்மணி "அனா இந்த நெய் விக்கற விலையைப் பாத்தியா, "பதினாறு ரூபாய் சொல்றான்" (இதுவும் அந்தகால விலை) ஜன்னலுக்கு பக்கத்திலே ஜாடிக்குள் மூடிக்கிடக்கும் நான் அவர்கள் பேசிக் கொண்டதைக் கேட்டு ஒரு பக்கம் ஆச்சரியம். இன்னொரு புறம் ஆனந்தம், சந்தோஷத்தால் தள்ளாடி வெளியே குதித்து விளையாடலாமா என்று தோன்றியது ஆயினும் மனதிற்குள் ஒரு பெரிய நிம்மதி.

பெருமூச்சு விட்டேன் பேரானந்தத்துடன் நினைத்துப்பார்க்கிறேன் இப்போது பாலாக இருந்த போது என்மதிப்பு வெறும் ஆறே ரூபாய் தான். ஆனால் பல இன்னல்களை தாங்கி, வலிகளைப் பொறுத்து, வேதனைகளை சகித்து கொண்டு இப்போது நெய் ஆன பிறகு என் மதிப்பு கூடி விட்டதே.

இதை நினைக்கின்றபோது நான் அன்று பட்ட கஷ்டங்கள் எல்லாம் ஒரு பொருட்டாகவே தெரியவில்லை எனக்கு என்றது அந்த நெய்.

இந்தக் கதையை ஸ்ரீஸ்ரீ மஹா பெரியவா அடிக்கடி விரும்பி கேட்பார்களாம். ஏனெனில் இந்தக் கதை நமக்கு உணர்த்தும் நல்ல ஒரு பாடம்.

நாம் வாழ்க்கையில் அன்றாடம் சந்திக்கும் சோதனைகள், சவால்கள், ஏமாற்றங்கள், கஷ்டங்கள் நம்மைப் பதப்படுத்தி, வளப்படுத்தி, பக்குவப்படுத்தி, நிலைப்படுத்தி, என்றும் நிலையான, நிரந்தரமான, என்றும் மாறாத, எவராலும் மாற்றமுடியாத பலத்தையும், வளத்தையும், நிம்மதியையும், இறை உணர்வையும் அளிக்க இறைவனால் நமக்கு நடத்தப்படும் பரீட்சைகள்.

சோதனைகளை இறைவன் அருளால், ஆசியால் வென்று துயர் நீங்கப்பெற்று முடிவில் நல்லாசி பெறுவோம் திண்ணியமாக.

ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர எனும் நாமம் ஒன்றே நம் தாரக மந்திரமாய், உயிர் மூச்சாய்க் கொள்வோம். ஓம் ஸ்ரீ குருப்யோ நமஹ

# பரிபூரண சரணாகதி



ஒரு சமயம் ராமானுஜர் ஸ்ரீரங்கத்தில் "கிருஷ்ணாவதாரம்" பற்றி தாம் செய்த உபன்யாசத்தில் கிருஷ்ணன், சலவைத் தொழிலாளியிடம், சலவை செய்த தமது துணிகளைக் கேட்டபோது அவன் தர மறுத்ததாகக் கூறினார். அன்றிரவு ஒரு சலவைத் தொழிலாளி ராமானுஜரிடம் வந்து கிருஷ்ணனுக்கு சலவை செய்த துணிகளைத் தர மாட்டேன் எனக் கூறிய அந்த சலவைத் தொழிலாளிக்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அதற்காக ரங்கநாதரின் துணிகளை இனி நானே துவைத்துத் தருகிறேன்" எனக் கூறினான். அப்படியே செய் எனக் கூறினார் ராமானுஜர்.

அந்த சலவைத் தொழிலாளியும் அடுத்த நாள் முதல் ரங்கநாதரின் துணிகளை வாங்கிச் சென்று பளிச்செனத் துவைத்து, ராமானுஜரிடம் காட்டி பிறகு கோவிலில் கொடுத்து வந்தான். ராமானுஜரும் அவனை மனமாறப் பாராட்டுவார். ஒரு நாள் அவன் ராமானுஜரிடம் நீங்கதான் என்னைப் பாராட்டுறீங்க ஆனால் ரங்கநாதர் பாராட்டலியே என்றான். அது கேட்டு ராமானுஜர் அவனை ரங்கநாதரிடம் அழைத்துச் சென்று, உங்களுக்காக இவன் தினமும் சிரத்தையாக துணிகளைத் துவைத்துக் கொண்டு வந்து கொடுக்கிறான், ஒருநாள் அவனிடம் பேசினால் தான் என்ன? எனக் கேட்டார்.

உடனே ரங்கநாதர் அவனிடம் உனக்கு என்ன வேண்டும் கேள்? என்றார். சாமி கிருஷ்ணாவதாரத்திலே உங்களுக்கு துவைத்த துணிகளைத் தர மாட்டேன்னு சொன்னானே அவனை மன்னித்து அவனுக்கு நீங்கள் முக்தி அளிக்க வேண்டும் என்றான். அவனை மன்னித்து விட்டேன், அப்பொழுதே அந்த விஷயத்தை மறந்தும் விட்டேன், என்றார் ரங்கநாதர். இதைக் கேட்டுக்கொண்டிருந்த ராமானுஜர் கிருஷ்ணாவதாரத்தில் தவறு செய்த ஒருவனுக்காக முக்தி கேட்டியே உனக்காக நீ ஏன் ஒண்ணுமே கேட்கவில்லை, எனக் கேட்டார்.

அதற்கு அந்தச் சலவைத் தொழிலாளி அதை நீங்க பார்த்துக்குவீங்க சாமி என்றான். இதனைக் கேட்ட ராமானுஜர் மனம் நெகிழ்ந்து அவனை ஆசீர்வாதம் செய்தார். உண்மையான பக்தர்கள் மற்றவர்களைப் பற்றித் தான் கவலைப்படுவார்கள். தம்மைப் பற்றி நினைப்பதில்லை. அதை குருவிடம் விட்டு விடுவார்கள்.

# சிவ பூஜை புண்ணியம்



ஒரு அந்தணர், தெருவில் எதையோ தேடிக்கொண்டு இருந்தார். அவர் நெடு நேரம் தேடுவதைப் பார்த்த ஒருவர் ஐயா .. என்ன தேடுகிறீர்கள்? என்று கேட்டார். சிவ பூஜைக்கு வாழைப்பழம் வாங்குவதற்காக ஓரணா வைத்திருந்தேன். அது கீழே விழுந்து விட்டது. அதைத்தேடிக் கொண்டிருக்கிறேன் என்றார். பரவாயில்லை பூஜைக்கும் நாழியாகி விட்டது நான் ஓரணா தருகிறேன். வாழைப்பழம் வாங்கி பூஜையை முடித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி ஓரணாவைக் கொடுத்து விட்டுப் போய் விட்டார்.

அந்த காலத்தில் ஓரணாவுக்கு நாலு வாழைப்பழம். அவரும் ஓரணாவுக்கு வாழைப்பழம் வாங்கி வைத்து பூஜையை முடித்தார். தேவேந்திரன் ஒரு நாள் தர்மராஜன் சபைக்கு வந்தான். எமதர்மன் தேவேந்திரனை உபசரித்து வரவேற்றான். சபையில் ஒரு ரத்ன சிம்மாசனமும், ஒரு தங்கத்தாலான சிம்மாசனமும் போடப்பட்டிருந்தது. அந்த சமயம் இரண்டு தேவ விமானங்கள் வந்தன. எமதர்மன் ஓடிப் போய் விமானத்திலிருந்த வரை வரவேற்று உபசரித்தான்.

ஒவ்வொரு விமானத்திலிருந்தும் ஒவ்வொரு புண்ணிய புருஷர்கள் இறங்கினார்கள். எமதர்மன் ஒருவரை ரத்ன சிம்மாசனத்திலும், மற்றொருவரை தங்க சிம்மாசனத்திலும் உட்கார வைத்தார். புண்ணிய புருஷர்களான நீங்கள் இங்கு வந்தது என் பாக்கியம் என்று சொல்லி அவர்களை எமதர்மன் உபசரித்ததை பார்த்த தேவேந்திரன் எமதர்மனைப் பார்த்து இவர்கள் அப்படி என்ன புண்ணியம் செய்தனர். அதிலும் ஒருவரை ரத்ன சிம்மாசனத்திலும்,

ஒருவரை தங்க சிம்மாசனத்திலும் உட்கார வைத்திருக்கிறீர்களே என்று கேட்டார்.

அதற்கு எமதர்மன் இதோ தங்க சிம்மாசனத்தில் இருப்பவர் தினமும் சிரத்தையுடன் சிவ பூஜை செய்தவர் அந்த புண்ணியத்தினால் இவரை தங்க சிம்மாசத்தில் உட்கார வைத்திருக்கிறேன்.

மற்றொருவரோ சிவ பூஜைக்கு உதவி செய்தவர். ஒரு நாள் சிவ பூஜைக்கு வாழைப்பழம் வாங்க உதவி செய்தவர். அதனால் இவருக்கு ரத்ன சிம்மாசனம் என்றான் எமதர்மன்.

தேவேந்திரன் ஆச்சரியப்பட்டு சிவபூஜை செய்தவரை விட சிவ பூஜைக்கு உதவி செய்தவருக்குத்தான் அதிக புண்ணியம் என்பதை தெரிந்து கொண்டேன் என்று சொல்லி எமதர்மனிடம் விடை பெற்று தேவலோகம் சென்றார்.

இங்கு கவனிக்க வேண்டியது என்னவென்றால் ஒரு சிவ பூஜை அல்லது கும்பாபிஷேகம் ஆகியவற்றை முன் நின்று நடத்துபவரை விட அதற்கு உதவி செய்பவர்களுக்கு புண்ணியம் அதிகம்.

அதனால் தான் எங்கேயாவது கும்பாபிஷேக திருப்பணி என்றால் என் பணமும் அதில் சேரட்டும் என்று பணம் கொடுத்து புண்ணியத்தை சேர்த்துக் கொள்கின்றனர்.

தெய்வத்திருப்பணிகளுக்கு சேவை செய்தாலும், கைங்கர்யம் கொடுத்தாலும் புண்ணியம். கொடுத்து பாருங்கள் அந்த புண்ணியம் எப்படி வேலை செய்கிறது என்று தெரிந்து கொள்வீர்கள். கொடுக்க, கொடுக்க மேன்மை அடைய வைப்பது தர்மம் மட்டுமே. செய்த தருமம் தலை காப்பது சத்தியம்.

---

குரு சரணம் குரு நாதா சரணம்

# சண்டிகேஸ்வரர்

சிவ பக்தியின் மேன்மையால் ஈசனின் அருள் பெற்ற அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராக போற்றப்படுபவரே சண்டேசுவர நாயனார். இவரே சண்டிகேஸ்வரர் ஆவார். தன்னுடைய சிவ பூஜைக்கு இடையூறு செய்த தன் தந்தையை தண்டித்தவர். இவரது இயற்பெயர் விசாரசருமா, தந்தை -எச்சதத்தன், தாய் - பவித்திரை, ஊர் - திருச்சேய்ஞலூர், தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் அருகே மண்ணியாற்றின் கரையில் அமைந்துள்ளது.

விசாரசருமா சிறு வயது முதலே இறை வழிபாட்டிலும், வேதங்களை கற்பதிலும் சிறந்து விளங்கினார். ஒரு சமயம் வேத பாடசாலை நண்பர்களுடன் மண்ணியாற்றங்கரை சென்ற சமயம் அங்கிருந்த பசு மேய்க்கும் பையன் தன் கோலால் பசுவை அடிப்பதைக் கண்டு மனம் வருந்தி இறைவனின் அபிஷேகத்திற்கு பஞ்ச கவ்யங்களும், சிவனடியார்கள் பூசிக் கொள்ளும் திருநீறுக்கு மூலப் பொருள்களை அளிப்பதும் அனைத்து வானோர்களையும் தன்னுள்ளே கொண்டது மட்டுமின்றி, சிவனார் எழுந்தருளும் வாகனமான நந்தியம் பெருமானின் இனமும் இக்கோமாதவேயாகும். இத்தகைய

பெருமைகளை கொண்ட பசுக்களை நானே மேய்கிறேன் என்று அதற்குரியவர்களிடம் சொல்லி அப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். அவரின் கனிவான அன்பால் பசுக்கள் நன்கு வளர்ந்து அவரை கண்டவுடன் அன்பால் பால் சொரிய, அப்பாலை வீணாக்காமல் மணலால் சிவலிங்கம் பிடித்து வேதங்கள் கூறி பசுக்களின் பாலைக் கொண்டு நித்தமும் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து வந்தான். இதனை கண்ட ஊர் மக்கள் அவருடைய தந்தையிடம் புகார் கூற இனி இவ்வாறு நடக்காமல் பார்த்துக் கொள்வேன் என்று எச்சதத்தன் கூறினார்.

மறு நாள் தன் மகன் அறியா வண்ணம் மகனை பின் தொடர்ந்து சென்று மரத்தின் பின் மறைந்து அவன் செயல்களை கண்டார். இவற்றை அறியாத விசாரசருமன் எப்போதும் போல் மணலில் லிங்கம் பிடித்து பசுக்களின் பாலைக் கொண்டு அபிஷேகம் செய்தான். இதனால் கோபம் கொண்ட அவன் தந்தையார் கோல் ஒன்றை எடுத்து அடிக்க ஆத்மார்த்தமான சிவ பூஜையில் இருந்தமையால் தந்தையின் வார்த்தைகள் மற்றும் அடிகளை உணரவில்லை விசாரசருமன். இதனால் கடும் சினம் கொண்டு தன் காலால் அபிஷேகப் பால் பாண்டங்களை விசாரசருமன் தந்தை உதைக்க தன் தந்தையின் செயலால் விழிப்புணர்வுக்கு வந்த விசாரசருமன் தன் அருகில் இருந்த கோலை எடுத்து தன் தந்தையின் கால்களை நோக்கி வீச, அக் கம்பானது



கோடாரியாக (மழுவாக) மாறி விசாரசருமன் தந்தையின் கால்களை துண்டாக்க அவர் நிலை தடுமாறி விழுந்தார். அக் கணமே வானில் அம்மையுடன் காட்சியளித்த சிவனார் என் மேல் கொண்ட பக்தியில் பெற்ற தந்தை என்றும் பாராமல் தவறுக்கு தண்டனை வழங்கிய உனக்கு இனி நானே தாயும், தந்தையும் ஆவேன் என்றும், மேலும் எம்முடைய வழிபாட்டில் சமர்ப்பிக்கப்படும் அனைத்து பொருட்களும் இனி உனக்கே உரித்தாகும். இன்று முதல் சிவனடியார்களுக்கு எல்லாம் முதன்மையாக விளங்குவாய் என்று அருளினார். பின்னர் தன் திருமுடியிலிருந்த கொன்றை மாலையை விசாரசருமாவுக்கு அணிவித்து "சண்டீச" பதவியையும் வழங்கினார். அன்று முதல் இறையருளால் "சண்டிகேஸ்வரர்" ஆனார்.

சிவாலயங்களின் தனத்துக்கு அதிபதியாக விளங்குகிறார் சண்டிகேஸ்வரர். இவரது சன்னதியானது சிவன் சன்னதிக்கு இடப்புறமாக கோமுகி அமைந்திருக்கும் இடத்திற்கு அருகே இருக்கும். பொதுவாக கோமுகிக்கும், விஷ்ணு துர்க்கைக்கும் இடையே அமைக்கப்பட்டிருக்கும்.

இவரின் சிவ தியானத்தை கலைக்காத வண்ணம் கைகளை சப்தமின்றி தட்டுவது போல பாவனை செய்து சிவனின் பொருளை எடுத்துச் செல்லவில்லை என்றும். சிவ தரிசன பலன் தருமாறும் வேண்டிக் கொள்ள வேண்டும். இவரை வலம் வராமல் சென்ற வழியே திரும்பி வர வேண்டும். இவரை தரிசித்தால் தான் சிவ தரிசன பலன் முழுமையாகக் கிடைக்கும்.

சண்டேசுவர நாயனாரின் சிவ பக்தியை எண்ணிய சுந்தரர் திருத் தொண்ட தொகையில்

"மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டி பெருமானுக்கும் அடியேன்" என்று போற்றுகிறார்.

கோயில்களில் பல்வேறு பெயர்களில் சண்டிகேஸ்வரர் காட்சியளிக்கிறார்.

சிவன் கோயில் - தொனிச் சண்டிகேஸ்வரர்
அம்பாள் கோயில் - யமுனா சண்டிகேஸ்வரர்
விநாயகர் கோயில் - கும்ப சண்டிகேஸ்வரர்
முருகன் கோயில் - சுமித்ர சண்டிகேஸ்வரர்
சூரியனார் கோயில் - தேஜஸ் சண்டிகேஸ்வரர்
நடுச்சத்திரம் காசி விஸ்வநாதர் கோயில் - ரிஷப வாகன சண்டிகேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார்.

திருநாரையூர் சௌந்தரேசுவரர் கோயிலில் இரட்டை சண்டிகேஸ்வரர் சன்னதியுள்ளது. சிவாகம புராணங்களின் படி ஒவ்வொரு யுகத்திற்கும் தனித் தனி சண்டிகேஸ்வரர் நியமிக்கப்படுகிறார்.

1. கிருதயுகத்தில் 4 முகங்கள் கொண்டவரும்
2. திரேதயுகத்தில் 3 முகங்களையும்
3. துவாபரயுகத்தில் 2 முகங்களை கொண்டவரும்
4. கலியுகத்தில் 1 முகத்தைக் கொண்ட சண்டிகேஸ்வரரும் இருப்பார்கள்.

"ஓம் த்வாரஸ்திதாய வித்மஹே ஸிவ பக்தாய தீமஹி
தன்னோ சண்டஹ் ப்ரசோதயாத்"

இது சண்டிகேஸ்வரரின் காயத்ரி மந்திரமாகும். இதனை தினமும் காலையில் 27 முறை துதிப்பது சிறந்த பலன்களை நல்கும். பிரதோஷம், சிவராத்திரி போன்ற தினங்களில் சிவன் கோவில் சென்று வழிபாடு செய்யும் போது சண்டிகேஸ்வருக்கு நெய் தீபமேற்றி இம் மந்திரத்தைக் கூறி வர மனம் உறுதி அடைந்து நாம் எடுக்கும் நல்ல காரியங்கள் அனைத்திலும் வெற்றி உண்டாகி வாழ்வில் வளம் உண்டாகும்.

........ ஹேமலதா கிருஷ்ணகுமார்

# KRISHNA DELISH COFFEE




## எங்களிடம் தரமான காபி கொட்டை அரைத்து தரப்படும்

## 1 கிலோ காபி பவுடர்

## ரூ 920 மட்டுமே

* Condition Apply

---

## நம்ம ஆத்து காபி

## FILTER COFFEE RS. 20 only

**COFFEE POWDER DOOR DELIVERY FREE ALSO AVAILABLE**

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

Mylapore Ganapathy's
CELEBRATING 83 Years ANNIVERSARY
Since 1942

மயிலாப்பூர்
# கணபதிஸ் ®
ஸ்தாபிதம் 1942

## வெண்ணெய் & நெய்

*பாரம்பரியமாக 1942 முதல்*

ஊத்துக்குளி வெண்ணெய் • ஊத்துக்குளி நெய்
மர செக்கு எண்ணெய் • அப்பளம் வகைகள் • பொடிகள்
உடனடி மிக்ஸ் • ஊறுகாய் வகைகள் • தொக்கு வகைகள்
இனிப்பு வகைகள் • கார வகைகள் • வடாம் • வத்தல்
உலர் பழங்கள் • ஸ்பைசஸ் • பேக்கரி வகைகள்
ஊர் ஸ்பெஷல்ஸ் • சீர் பட்சணம்

**மயிலாப்பூர் கிளை :**
# 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
[பி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்]
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272

**மேற்கு மாம்பலம் கிளை :**
# 50, ஆர்ய கவுடா ரோடு,
[ ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363

கருத்துக்களை தெரிவிக்க : 044 – 4856 6781 | வாட்ஸ் அப் : 73581 56781
மின்னஞ்சல் : info@mylaporeganapathys.com
ஆன்லைன் ஆர்டர்கள் www.mylaporeganapathys.com